| வாக்குமூலம் | Date: 24.07.2023 |
|---|---|
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: CC 20/2021 | |
| வழக்கு சாட்சி : PW1 | |
| பெயர் : திரு. பொன்னர் | ஜாதி : |
| த/பெ /க/பெ. : திரு. சுப்பிரமணி | தொழில் : அக்கவுண்ட்ஸ் வேலை |
| கிராமம் : தாக்கம்பட்டி | சமயம் : இந்து |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 29 |
| ( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு தாக்கல் ) | |

---

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

**1.** எதிரி மகள் காணாமல் போனது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை. பெண் காணாமல் போய் புகார் கொடுத்து எத்தனை நாளில் விசாரித்தார்கள் என்றால் மேற்படி பெண் காணாமல் போய் 2 வாரம் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஆஸ்பத்திரியில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது எனது நண்பர் மேற்படி பெண்ணை கூட்டி சென்றார் என்ற விபரம் பற்றி சொன்னேனா என்றால் இல்லை. மீண்டும் சாட்சி மேற்படி போலிசார் என்னை காவல்நிலையத்தில் விசாரித்தார். முதல் முறையாக போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரித்தற்கு என்னிடம் கையெழுத்து பெற்றார்களா என்றால் பெற்றார்கள். வெள்ளை பேப்பரில் எழுதி வாங்கினார்களா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள், அந்த பேப்பரில் கையெழுத்து செய்தேன். அந்த ஒரு கையெழுத்தை தவிர வேறு கையெழுத்து எதுவும் நான் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் போது தான் அந்த கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என்னை விசாரிக்கும் போது வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2. கையெழுத்து செய்த பின்பு தனிப்பட்ட முறையில் போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. போனில் யார் என்னை அழைத்தார்கள், எந்த நம்பரில் இருந்து அழைத்தார்கள், யாருடையது போன் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை, அவர்கள் கேட்கவில்லை, யார் அழைத்தார்கள் என்று சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்கின்ற இடத்தில் கோவிலை சுற்றி வீடுகள் உள்ளது என்றால் சரிதான். 2 வீடுகள் இருக்கும். சம்பவம் நடந்தாக சொல்லப்படுகின்ற இடத்தில் பழனியப்பன் வீடு, மற்றொலுரு பழனியப்பன் வீடு, கன்னியப்பன் வீடு, முருகேசன் வீடு ஆகிய நபர்களின் வீடுகள் உள்ளன. மேற்படி நபர்களுக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற நேரத்தில் இருந்தார்கள், குறிப்பாக பழனியப்பன் இருந்தார்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லும் சம்பவம் எவ்வளவு நேரம் நடைபெற்றிருக்கும் என்றால் ஒரு மணிநேரம் நடைபெற்றிருக்கும். ஒரு மணிநேரத்தில் 10, 30 பேர் கும்பலாக சேர்ந்திருப்பார்களா என்றால் சேர்ந்திருப்பார்கள். கும்பலில் இருந்த நபர்களுக்கும், எனக்கும் முன்விரோதம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. பெண் காணாமல் போனது சம்மந்தமாக இதற்கு முன்பு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான், அது போன்று புகாரும் கொடுக்கவில்லை. போலிசில் புகார் கொடுத்தார்கள் என்றும், அதில் விசாரணை செய்தார்கள் என்றும், அதிலிருந்து தப்பிபதற்காகத்தான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எதிரிகள் கல்லால் எறிந்ததாக சொல்வதற்கு அந்த கருங்கல்லா, செங்கல்லா என்று குறிப்பிட்டு பார்த்தேனா, போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், கல் என்று சொல்லியுள்ளேன், கருங்கல் போன்று தெரிந்தது. அதன்பின்பு அந்த கல்லை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. விசாரணையே மருத்துவமனையில்தான் நடைபெற்றது. கல்லை கைப்பற்றிய பின்பு கல்லை காண்பித்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. தடியால் அடித்தாக சொல்வது அந்த தடியின் பருமன், நீளம் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் கையும் பிடிக்கும் அளவில் குட்டையாக இருந்தது, என்ன வகையானது என்று எனக்கு தெரியாது. அடிபட்டவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் கால் அடிப்பட்டது எலும்பு முறிவு ஏற்பட்டவுன் சரியாக நிற்கமுடியவில்லை,

மயக்கம் வந்தது. அந்த மயக்கம் எங்கு வந்து தெளிந்தது என்றால் சம்பவ இடத்திலிருந்து எனது வீட்டிற்கு வந்து மருத்துவமனைக்கு வரும்போதே தெளிந்துவிட்டேன். மயக்கம் எவ்வளவு நேரம் இருந்தது என்றால் 5 நிமிடம் இருந்தது. ஓடும்போது தடுமாறி விழுந்தேனா என்றால் இல்லை. அடிப்பட்டதால் விழுந்தேன். அந்த ஒரு காயத்தை தவிர வேறு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். அந்த காயம் காலின் முன்பகுதியா, பின்பகுதியா என்றால் முன்பகுதிதான். சம்பவஇடத்திலிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டு அதன்பின்பு மருத்துவமனை சென்றுவிட்டேன். அடிப்பட்வுடனே பெரியதாக தெரியாமல் இருந்தது. நான் வீட்டிற்கு சென்றபோது வீக்கம் அதிகமாகி மருத்துவமனைக்கு சென்றேன்.

5. எந்த மருத்துவமனைக்கு முதன் முதலில் சென்றேன் என்றால் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மருத்துவரிடம் விபரம் பற்றி சொன்னேனா என்றால் ஆமாம். அப்போது கொரனா காலம் என்பதால் எக்ஸ்ரே எடுத்து பார்த்தார்கள், எலும்பு முறிவு இருந்ததால் திருச்சி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். திருச்சி மாருதி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு சென்றேன். மாருதி மருத்துவமனையில் ஆப்ரேசன் செய்யக்கூடிய மருத்துவர் இல்லாததால் உடனடியாக மீண்டும் மணப்பாறை குமரன் தனியார் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன். எத்தனை நான் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் அறுவை சிகிச்சை முடிந்த மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

6.நான் எங்கு வேலை பார்த்து வருகிறேன் என்றால் சென்னையில் வேலை பார்த்து வருகிறேன். எதிரியின் பெண்ணை கூட்டி சென்றது எனது நண்பர் என்று சொன்னால் தவறு, எனது ஊர்க்காரர். என்னுடன் 5 ம் வகுப்பு வரை படித்தவர். நான்தான் பெண்ணை கடத்துவதற்கு உடந்தையாக இருந்ததாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. இந்த வழக்கில் என்னையும் சேர்த்து விடுவார்கள் என்ற கால்புணர்ச்சிகாக தானாக கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னை அடித்தாகவோ, மிரட்டியதாகவோ, கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. அது போன்று ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.